Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://srilanka.usembassy.gov

Release No. 20160310T

## பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கு பங்காளித்துவத்தை விரிவாக்கும் அமெரிக்காவும், இலங்கையும்

***மார்ச் 09, 2016:*** சுயாதீன அமெரிக்க அபிவிருத்தி நிறுவனமான Millennium Challenge Corporation (MCC)இன் பிரதிநிதிகள் இந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்து, பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான பிரதான சவால்களை வெல்வதற்கான பங்காளித்துவத்தை ஆரம்பித்தனர். அபிவிருத்தி நிகழ்ச்சியை ஆரம்பிப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, மற்றும் சிரேஷ்ட அமைச்சரவை அமைச்சர்களையும், சிவில் சமூக, அபிவிருத்தி பங்காளர்களையும், உள்ளூராட்சி சபை அதிகாரிகளையும் இந்த பிரதிநிதிகள் குழு சந்தித்தது.

"இலங்கையின் பொருளாதார எதிர்காலத்தை வெளிப்படையான மற்றும் நிலையான வழியில் முன்னேற்றுவதற்கு பிரதான வகிபாகத்தை வகிப்பதற்கான இயலுமை MCCஇடம் உள்ளது" என அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷப் தெரிவித்தார். இலங்கை மக்களில் முதலீடு செய்வதற்கு இலங்கை தலைமையிலான முயற்சிகளுக்கு உதவுவதும், தொழில்முனைவோர்களை தூண்டும் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கும் வர்த்தகத்திற்கு உகந்த சூழலை உருவாக்குவதுமே இலக்காகும்" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

2004ஆம் ஆண்டில் ஆரம்பித்தது முதலாய், ஐந்து கண்டங்களிலும் 40 நாடுகளுக்கு அண்ணளவாக 11.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை MCC வழங்கியுள்ளது. தொடக்கநிலை நிகழ்ச்சி என்பது கொள்கை திருத்தங்களுக்கு ஆதரவளித்தல், பொருளாதார வளர்ச்சிக்கு நாட்டின் பாரிய தடைகள் என அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் நிறுவனங்களை வலுப்படுத்தல் என்பவற்றின் மூலம், பாரிய MCC நன்கொடைக்கு தெரிவு செய்யப்படுவதற்கான நாட்டின் சாத்தியங்களை பரவலாக்குவதனை இலக்காகக் கொண்ட நாட்டினால் முன்னெடுக்கப்படும் பங்காளித்துவமாகும். தொடக்கநிலையில் வெற்றி கண்டதன் பின்னரே பல நாடுகளல் MCC உடன்படிக்கை பங்காளர்களாக மாறின.

"ஜனநாயக நிறுவனங்களுக்கு புத்துயிரளித்தல், ஆட்சிமுறையை மேம்படுத்தல் மற்றும் மனித உரிமைகளுக்கான பாதுகாப்பினை மீளுறுதி செய்தல் என்பவற்றில் கடந்த வருடத்தில் இலங்கை வெளிப்படுத்திய அபார தேர்ச்சியின் காரணமாகவே இன்று நாங்கள் இங்கு இருக்கின்றோம்" என கொள்கை மற்றும் மதிப்பீடுகளுக்கான MCCஇன் உதவித் தலைவர் பெத் ட்ரிட்டர் தெரிவித்தார். "தொடக்க நிலை நிகழ்ச்சி பங்காளித்துவமானது இந்த தேர்ச்சியை அங்கீகரித்து, இந்த கோட்பாடுகள் குறித்த அரசாங்கத்தின் தொடரும் அர்ப்பணிப்பினை ஊக்குவிக்கின்றது" என மேலும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்து வரும் மாதங்களில், MCC மற்றும் இலங்கை அரசாங்கம் என்பன இணைந்து பொருளாதார வளர்ச்சிக்கான நாட்டின் பாரிய தடைகள், தனியார் முதலீட்டுக்கான சந்தர்ப்பங்கள், மற்றும் வறுமை ஒழிப்புக்கான சமூக தடைகள் என்பவற்றை அடையாளம் காணும். புதிய தொடக்க நிலை நிகழ்ச்சியினால் ஆதரவளிக்கப்படும் கொள்கை மற்றும் நிறுவன திருத்தங்களை தீர்மானிப்பதற்கு இந்த மதிப்பீட்டின் முடிவுகள் உதவும். கலந்தாய்வு செயற்பாடு, இலங்கை தனியார் துறை மற்றும் சிவில் சமூகத்தை ஈடுபடச் செய்தல் என்பன இந்த நிகழ்ச்சியின் அபிவிருத்தியில் உள்ளடங்கும். MCC குறித்து மேலும் அறிந்து கொள்வதற்கு www.mcc.gov

# # #



**படவிளக்கம் 1:** தொடக்க நிலை நிகழ்ச்சி நன்கொடைகள் எவ்வாறு வளர்ச்சியை தூண்டவும், வறுமையை ஒழிக்கும் என்பது குறித்து அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷப் மற்றும் கொள்கை மற்றும் மதிப்பீடுகளுக்கான MCCஇன் உதவித் தலைவர் பெத் ட்ரிட்டர் ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுடன் கலந்துரையாடுகின்றனர்.



**படவிளக்கம் 2:** எதிர்வரும் மாதங்களில் MCC மற்றும் இலங்கை அரசாங்கம் என்பன இணைந்து பொருளாதார வளர்ச்சிக்கான நாட்டின் பாரிய தடைகள், தனியார் முதலீட்டுக்கான சந்தர்ப்பங்கள் மற்றும் வறுமை ஒழிப்புக்கான சமூக தடைகளை அடையாளம் காணவுள்ளன.